பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

25 10 2024 **FRIDAY** **6.30 PM**

தலைப்புச் செய்திகள்

1. ஐ நா உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

2. மருத்துவப்படிப்புகளுக்கான இடங்கள் இதுவரை இல்லாத அளவிற்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

3. துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் பங்கேற்ற நிகழ்ச்சியில் தமிழ்தாய் வாழ்த்து தவறாக பாடப்பட்டதற்கு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்பாரா என்று மத்திய இணையமைச்சர் திரு எல்.முருகன் வினவியுள்ளார்.

4. திமுக, வாரிசு அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாக அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

5. 17 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசியக்கோப்பை தகுதிச்சுற்று கால்பந்து போட்டியில், இந்தியா 1-0 என்ற கோல் கணக்கில் துர்க்மெனிஸ்தானை வென்றது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>

ஐ நா பாதுகாப்பு குழுமம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

அரசு முறைப்பயணமாக புதுதில்லி வந்துள்ள ஜெர்மன் பிரதமர் திரு **Olaf Scholz** –வுடன் நடத்திய பேச்சுக்களுக்கு பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

மேற்காசியா மற்றும் உக்ரைன் பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். இதற்கு தேவையான பங்களிப்பை வழங்க இந்தியா தயாராக உள்ளதாகவும் பிரதமர் கூறினார். இந்த பேச்சுக்களுக்கு பின்னர் இந்தியா – ஜெர்மனி இடையே பல்வேறு ஒப்பந்தங்களும் கையெழுத்தாயின.

<<<<<<>>>>>

மருத்துவப்படிப்புகளுக்கான இடங்கள் இதுவரை இல்லாத அளவிற்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார். புதுதில்லியில் உள்ள மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

75 ஆயிரம் மருத்துவப்படிப்புக்கான இடங்கள் அடுத்த ஐந்தாண்டுகளில் உருவாக்கப்பட உள்ளதாகவும் திரு நட்டா தெரிவித்தார்.

<<<<<<>>>>>

கால்நடை பெருந்தொற்று நிதியம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்சன் சிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் கால்நடை கணக்கெடுக்கும் பணியினை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

கோமாரி நோய் உள்ளிட்ட கால்நடைகளை தாக்கும் நோய்களை முற்றிலுமாக ஒழிப்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக அவர் கூறினார்.

கால்நடைகளுக்கான வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதில் இதுபோன்ற கணக்கெடுப்புப்பணிகள் முக்கிய பங்கு வகிப்பதாகவும் திரு ராஜீவ் ரஞ்சன் சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் பங்கேற்ற நிகழ்ச்சியில் தமிழ் தாய் வாழ்த்து தவறாக பாடப்பட்டதற்கு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் என்ன பதில் சொல்லப்போகிறார் என்று மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் வினவியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், டி டி தமிழ் தொலைக்காட்சி நிகழ்ச்சியில், தமிழ்தாய் வாழ்த்து தவறாக பாடப்பட்டதாக கூறி முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலினும், துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலினும் அரசியல் செய்ததாக குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற மாநில ஆளுநர் திரு ஆர் என் ரவிக்கு எதிராக இனவாத கருத்துக்களை தெரிவித்து, அவர் பதவி விலக வேண்டும் என வற்புறுத்திய திரு மு.க.ஸ்டாலின், மத்திய அரசு ஆளுநரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்ததை அவர் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்தாய் வாழ்த்து தவறாக பாடப்பட்டதற்கு பொறுப்பேற்று திரு உதயநிதி ஸ்டாலின் பதவி விலகுவாரா அல்லது திரு மு.க.ஸ்டாலின் அவரை பதவி நீக்கம் செய்வாரா என்றும் அவர் வினவியுள்ளார்.

ஆளுநர் நிகழ்ச்சியை வைத்து தொடர்ந்து விவாதங்களை நடத்திய ஊடகங்கள் இதுகுறித்து பேசுமா என்றும் திரு எல். முருகன் கேள்வி எழுப்பியுள்ளார்.

தேமுதிக, பாமக உள்ளிட்ட கட்சிகளும் தமிழ்தாய் வாழ்த்து பாடுவதில் நிகழ்ந்த பிழை வேதனை அளிப்பதாக கூறியுள்ளன.

<<<<<<>>>>>

திமுக, வாரிசு அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

சேலம் மாவட்டம் எடப்பாடியில் அஇஅதிமுக நிர்வாகிகள் பங்கேற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார். அஇஅதிமுக ஜனநாயக முறைப்படி இயங்குவதாகவும், வாரிசு அரசியல் இல்லை என்றும் அவர் தெரிவித்தார். மக்கள் நலனை மட்டுமே கருத்தில்கொண்டு அஇஅதிமுக செயல்படுவதாகவும் திரு எடப்பாடி பழனிசாமி கூறினார்.

<<<<<<>>>>>

மதுவிலக்கு அதிகாரம் மாநில அரசுக்கு மட்டுமே உள்ளது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள நிலையில், தமிழகத்தில் மதுவிலக்கை அமல்படுத்த திமுக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மதுவினால் ஏற்படும் பாதிப்புகளை கருத்தில்கொண்டு திமுக அரசு இந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

மதுப்பழக்கம் காரணமாக தமிழகத்தில் ஆண்டுக்கு இரண்டு லட்சம் பேர் உயிரிழப்பதாகவும் திரு ராமதாசு அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

இந்திய மருத்துவ முறையின் வளர்ச்சிக்கு தமிழக அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா.சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

<<<<<<>>>>>

தீபாவளி பண்டிகையையொட்டி, மதுரை மாவட்டம் திருமங்கலம் ஆட்டு சந்தையில் ஆடுகள் விற்பனை விறுவிறுப்பாக நடைபெற்றது.

மதுரை மட்டுமின்றி, அண்டை மாவட்டங்களை சேர்ந்த ஆடு வியாபாரிகளும், பொதுமக்களும் ஆடுகளை வாங்கி சென்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார். எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வேளாண் பயிர் கடன் உதவிகளை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று வழங்கினார்.

----------------

கன்னியாகுமரி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஆட்சியர் திருமதி அழகுமீனா இன்று ஆய்வு மேற்கொண்டார்.

-------------------

நாமக்கல் மாவட்டத்தில் மரக்கன்றுகள் நடும் பணியினை ஆட்சியர் திருமதி உமா இன்று தொடங்கிவைத்தார்.

---------------

திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் மாநில பேரிடர் மீட்புப்படையின் இரண்டு நாள் கண்காட்சியை ஆயுதப்படை காவல்துறை ஐ ஜி திருமதி விஜயகுமாரி இன்று தொடங்கிவைத்தார்.

----------------

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் கந்தசஷ்டி திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான சூரசம்ஹாரம் அடுத்த மாதம் 7-ஆம் தேதி நடைபெறவுள்ளதையொட்டி, அன்றைய தினம் தூத்துக்குடி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

17 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசியக்கோப்பை தகுதிச்சுற்று கால்பந்து போட்டியில், இந்தியா 1-0 என்ற கோல் கணக்கில் துர்க்மெனிஸ்தானை வென்றது.

தாய்லாந்தில் நடைபெற்ற இப்போட்டியில், இந்தியாவின் ரிஷி சிங் ஒரு கோல் அடித்தார்.

-----------------

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான இன்று ஆட்டநேர இறுதியில் நியூசிலாந்து இரண்டாவது இன்னிங்சில் 5 விக்கெட் இழப்பிற்கு 198 ரன் எடுத்துள்ளது.

புனேயில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், **Tom Blundell** 30 ரன்னுடனும், **Glenn Phillips** 9 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

முன்னதாக, இந்தியா முதல் இன்னிங்சில் 156 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக ஜடேஜா 38 ரன் எடுத்தார்.

நியூசிலாந்து முதல் இன்னிங்சில் 259 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

------------

வளரும் அணிகளுக்கான ஆசியகோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா “ஏ” - ஆப்கானிஸ்தான் “ஏ”அணிகளுக்கு இடையேயான அரையிறுதி ஆட்டம் ஓமனில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

-----------

செஸ் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலில் இந்தியாவின் அர்ஜுன் எரிகேசி, 2 ஆயிரத்து 800 புள்ளிகளை கடந்து வரலாற்று சாதனை படைத்துள்ளார். விஸ்வநாதன் ஆனந்துக்கு பிறகு இந்த சாதனையை படைக்கும் பெருமையை அவர் பெற்றுள்ளார்.

--------

**Dutch** ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

-----------

மலேசியாவில் நடைபெற்றுவரும் ஜோஹர் கோப்பை ஜுனியர் ஹாக்கிப்போட்டியில் இந்தியா – நியூசிலாந்து இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

இரு அணிகளும் தலா மூன்று கோல் போட்டன.

<<<<<<END>>>>>